


**20. 02. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் தரவுகள் அடிப்படையிலான வலுவான ஆட்சி முறையின் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

2. நாட்டின் முதலாவது செமி கண்டக்டர் ஆலை விரைவில் தனது வர்த்தக உற்பத்தியை தொடங்கும் என்றும் மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. கோவை விமான நிலையத்தின் புதிய வசதிகளை மத்திய அமைச்சர்கள் திரு. ராம்மோகன் நாயுடு, டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோர் இன்று பிற்பகல் தொடங்கிவைக்கின்றனர்.

4. தமிழக அரசின் ஐந்தாண்டு ஆட்சி நிறைவை ஒட்டி அனைத்து தரப்பினருக்கும் முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார்.

5. கடைகோடி மக்களின் நலனை பாதுகாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை அரசு நிறைவேற்றியுள்ளதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு கூறினார்.

இனி விரிவான செய்திகள்

************

பிரதமர்

நாட்டில் தரவுகள் அடிப்படையிலான வலுவான ஆட்சி முறையின் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் செயற்கை நுண்ணறிவு மற்றும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளுடன் இன்று கலந்துரையாடிய பிரதமர், தவறான தகவல்கள் குறித்து விழிப்புடன் இருப்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

நாட்டின் தேவைக்கு ஏற்ற தீர்வுகள் கண்டறியப்பட வேண்டும் என்று வலியுறுத்திய பிரதமர் UPI டிஜிட்டல் பரிவர்த்தனை முறையை சுட்டிக்காட்டினார்.

இந்திய தொழிற்சாலைகள் மீது தமது நம்பிக்கையை வெளிப்படுத்திய பிரதமர் உள்நாட்டு உற்பத்தி பொருட்கள் மீதான நம்பகதன்மை ஊக்குவிக்கப்பட வேண்டும் என்றார்.

விண்வெளி துறையில் தனியார் பங்களிப்பை விரிவுபடுத்துவது குறித்து ஆலோசனை வழங்கிய பிரதமர், ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் வலிமையான முதலீடுகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில் 16 செயற்கை நுண்ணறிவு மற்றும் உயர்தொழில்நுட்ப ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் செயல் அதிகாரிகள், நிறுவன அதிகாரிகள், தத்தம் ஆலோசனைகளை எடுத்துரைத்தனர்.

சுகாதாரம், வேளாண்மை, சைபர் பாதுகாப்பு, விண்வெளி, மக்கள் தொகை அடிப்படையிலான சமூக

ஆளுமை ஆகியவை குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

துணிச்சலான முடிவுகளையும், ஆக்கப்பூர்வமான தீர்வுகளையும் வழங்கிய புதுமையான கண்டுபிடிப்பாளர்களையும் படைப்பாற்றல் திறனாளர்களையும் பிரதமர் பாராட்டினார்.

செயற்கை நுண்ணறிவை முன்னெடுத்து செல்லும் வகையில் அதனை வலுப்படுத்திய இந்தியாவின் தொடர் முயற்சிகளுக்கு ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் பாராட்டு தெரிவித்தன.

புதுதில்லியில் இத்தகைய செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு நடத்தப்படுவது நாட்டின் வலிமையை பறைசாற்றுவதாக இந்நிறுவனங்கள் கூறின.

இதனிடையே பிரதமர் லீச் டென்ஸ்டீன் இளவரசர் அலோயிஸ் உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொண்டார்.

இருநாடுகளுக்கிடையே வர்த்தகம், முதலீடுகள், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட வளரும் தொழில் நுட்பங்களில் ஒத்துழைப்பு குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

ஸ்லோவேக்கிய அதிபருடனும் பிரதமர் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

இருநாடுகளின் டிஜிட்டல் துறையில் பரஸ்பர பயன்கள் குறித்து இருதலைவர்களும் விவாதித்தனர்.

************

ஆண்டனியோ குட்ரெஸ்

செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் புதுதில்லியில் இன்று உரையாற்றிய ஐ.நா பொதுச்செயலாளர் திரு.ஆண்டனியோ குட்ரெஸ் அறிவியல் சார்ந்த ஆளுமை, தீர்வுகளுக்கான உந்து சக்தி என்றார்.

A I தொழில்நுட்பத்தால் விரைந்து செயலாற்றும் பிரிவுகளை கண்டறிய அறிவியல் ரீதியிலான ஆளுமை வழிகோலும் என்றும் குறிப்பிட்டார்.

குழந்தைகள் தொடங்கி தொழிலாளர்கள் வரை தயாரிப்பு, பாதுகாப்பு, முதலீட்டு பிரிவுகளில் தேசங்கள் சிறப்பாக செயலாற்ற A I தொழில்நுட்பம் பயனளிக்கும் என்றார்.

************

அஸ்வினி வைஷ்ணவ்

செமி கண்டெக்டர் விநியோக சங்கிலிக்கு இன்றியமையா பங்காற்றும் Pax Silica பிரகடனம் கையெழுத்தானதற்கு மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்த உடன்படிக்கையின் மூலம் செமி கண்டெக்டர் துறை பெரிதும் பயன்பெறும் என்றும் மின்னணு துறை வளர்ச்சி பெறும் என்றும் குறிப்பிட்டார்.

நாட்டின் முதலாவது செமி கண்டெக்டர் ஆலை விரைவில் தனது வர்த்தக உற்பத்தியை தொடங்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

************

எல்.முருகன்

கோவை விமான நிலையத்தில் பல்வேறு புதிய வசதிகளை மத்திய அமைச்சர்கள் திரு.ராம்மோகன் நாயுடு, டாக்டர் எல்.முருகன் திரு.முரளிதர் மோஹல் ஆகியோர் இன்று பிற்பகல் தொடங்கிவைக்கின்றனர்.

பயணிகளுக்கு மலிவுவிலையில் உணவகம்,

புவிசார் குறியீடு பொருட்களுக்கான விற்பனையகம், உள்ளிட்டவை இதில் அடங்கும்

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

************

ஆளுநர்

மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் சார்பில், காஞ்சிபுரம் ஏனாத்தூர் தனியார் கல்லூரியில் 17வது பழங்குடியினர் இளைஞர் பரிமாற்ற திட்டத்தை தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி இன்று தொடங்கிவைத்து சிறப்புரையாற்றினார்.

பல்வேறு மாநிலங்களின் இளையோர் கலை நிகழ்ச்சிகளையும் அவர் பார்வையிட்டார்.

வரும் 25ம் தேதி வரை நடைபெற உள்ள இந்நிகழ்ச்சியில் ஜார்க்கண்ட் ஒடிசா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலிருந்து 200 பழங்குடியின மாணவர்கள் பங்கேற்று நம் நாட்டின் கலை கலாச்சாரங்களை அறிந்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

************

முதலமைச்சர் நன்றி உரை

தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் பல்வேறு மக்கள் நல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் ஐந்தாண்டு நிறைவை ஒட்டி அனைவருக்கும் இன்று நன்றி தெரிவித்து உரையாற்றிய அவர், தமிழகம் சமச்சீர் வளர்ச்சியை பெற்றுள்ளதாக கூறினார்.

தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் எவ்வித பாரபட்சமுமின்றி மக்கள் நல பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக எடுத்துரைத்தார்.

இந்த ஐந்தாண்டு காலத்தில் தமக்கு ஒத்துழைப்பு வழங்கிய தலைமை செயலர் உள்ளிட்ட அனைத்து துறை அரசு அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் தமது நன்றியை முதலமைச்சர் உரித்தாக்கியுள்ளார்.

************

தங்கம் தென்னரசு

தமிழ்நாட்டில் சமூகநீதியை நிலைநாட்ட அரசு முனைப்புடன் செயலாற்றும் என்று மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு இன்று பதில்அளித்து பேசிய

அமைச்சர் தமிழக அரசின் திட்டங்கள் பிற மாநிலங்ளுக்கு முன்னோடியாக உள்ளதாக குறிப்பிட்டார்.

உயர்கல்வியில் மாணாக்கர் சேர்க்கை தேசிய சராசரியை விட தமிழ்நாட்டில் இரண்டு மடங்கு அதிகம் என்றார்.

பள்ளி மாணாக்கருக்கான காலை உணவு திட்டத்தை பிற மாநிலங்களும் நடைமுறைபடுத்தப்படுத்தி வருவதாக எடுத்துரைத்தார்.

உலக நாடுகளுக்கு இணையாக போட்டியிடும் அளவிற்கு தமிழகம் முன்னேறியுள்ளதாக கூறினார்.

தமிழ்நாடு முழுவதும் சாலைகள் மேம்பாலங்கள் மருத்துவமனைகள் தொழிற்பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கடைகோடி மக்களின் நலனை பாதுகாக்கும் வகையில் அரசு செயல்படுவதாகவும் எடுத்துரைத்தார்.

************

எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்

இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளித்த மாநில வேளாண் அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கடந்த ஐந்தாண்டுகளில் வேளாண் துறைக்கு ஒரு லட்சத்து 94 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதாக எடுத்துரைத்தார்.

676 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

தமிழ்நாட்டில் உணவு உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும், விவசாயிகள் நலன்கள் பாதுகாக்கப்படுவதாகவும் எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு இடைக்கால பட்ஜெட் மீதான பதில் உரையை அஇஅதிமுக, பிஜேபி, பா.ம.க கட்சிகள் இன்று புறக்கணித்தன.

தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடர் மறு தேதி குறிப்பிடப்படாமல் இன்று ஒத்திவைக்கப்பட்டது.

************

இருவரி

தமிழ்நாட்டில் 654 அரசு உதவிபெறும் மேல்நிலைபள்ளிகளில் பயிலும் 41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களை மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி சென்னையில் இன்று திறந்துவைத்தார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வாய்க்கால் தூர்வாரும் பணிகள் குறித்து கருத்த கேட்பு கூட்டம் வரும் திங்கட்கிழமை நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திருமதி பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் காச நோய் எதிர்ப்பு அனுசரிப்பு வாரத்தை ஒட்டி விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி இன்று தொடங்கிவைத்தார்.

விழுப்புரம் அருள்மிகு மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோவில் தேர்திருவிழாவை ஒட்டி

மாவட்டத்திற்கு நாளை உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

************

தாட்கோ

திருச்சி மாவட்டத்தில் தூய்மை பணியாளர் நல வாரியத்தில் உறுப்பினர்கள் உரிய விவரங்களை பதிவு செய்து பயன்பெற மாவட்ட தாட்கோ மேலாளர் திரு.விஜயகுமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

- வாய்ஸ் -

************

கோவில் - வாய்ஸ்:

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் மாசி திருவிழா நாளை கொடியேற்றத்துடன் துவங்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

வானிலை

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தென்கிழக்கு வங்க கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த 48 மணி நேரத்தில் உருவாக கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர் தேனி மாவட்டங்களில் நாளை இடி மின்னலுடன்

கூடிய கன மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

************

விபத்து

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் பேருந்து புளியமரத்தின் மீது மோதி தலைகுப்புற கவிழ்ந்ததில் 50 பேர் படுகாயமடைந்தனர்.

விபத்து குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

************

கிரிக்கெட்

பாங்காக்கில் நடைபெறும் ஆசிய கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்திற்கு இந்தியா ஏ அணி முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்திய ஏ அணி – இலங்கை ஏ அணியை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டம் பங்களா தேஷ் – பாகிஸ்தான் மகளிர் ஏ அணிகளுக்கிடையே இன்று நண்பகல் நடைபெறுகிறது.

இதில் வெற்றிபெறும் அணி நாளை மறுநாள் நடைபெறும் இறுதி ஆட்டத்தில் இந்திய அணியை எதிர்கொள்ளும்.

************

டென்னிஸ்

புதுதில்லியில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் கலியாண்டா பூனாச்சா – தாய்லாந்தின் ஐசாரோ இணை ஜப்பான் - சுவிட்சர்லாந்த் இணையை இன்று எதிர்கொள்கிறது.

தற்போது நடைபெறும் மற்றொரு காலிறுதியில் இந்திய இணை – தென்கொரியா – பின்லாந்து இணையை எதிர்கொண்டுள்ளது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.